செ.வெ.எண்.77 நாள்.26.10.2017.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், பர்கிட்மாநகர் பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வீடு,வீடாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், பர்கிட்மாநகர் பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.10.2017) வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாளையங்கோட்டை ஒன்றியம், பர்கிட்மாநகர் பகுதியில் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி, அபேட் மருந்து ஊற்றும் பணி மற்றும் மெகா தூய்மை பணி ஆகிய பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பகுதியில், டெங்கு கொசு புழு கண்டறியப்பட்ட ஒரு வீட்டின் உரிமையாளருக்கு ரூ.2 ஆயிரம் அபராதமும், மேலும், ஒரு வீட்டில் டெங்கு கொசு புழு கண்டறியப்பட்டு, குப்பைகளை குவித்து வைத்திருந்த வீட்டின் உரிமையாளருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார். பர்கிட்மாநகர் பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளின் பொறுப்பு அலுவலர் மெத்தனமாக செயல்பட்டதை கண்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள் அவர் மீது துறை வாரியாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் தூய்மை பணிகளில் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்மென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சண்முகத்தாய், திருமதி.ஆறுமுககனி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜஸ்டின் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.